# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● செப்டம்பர் 17, 2017 Weekly E-paper ● September 17, 2017


# பெரும்பான்மை இழந்த அரசும் பேசாமல் இருக்கும் ஆளுநரும்!



● சுப.வீரபாண்டியன்

இன்று வரையில் இப்படி ஓர் அநாகரிகம் தமிழ்நாட்டில் அரங்கேறியதில்லை. ஆளுங்கட்சியினர் அன்றாடம் அடித்துக் கொள்கின்றனர். ஒருவரை ஒருவர் மிக இழிவாகப் பேசிக் கொள்கின்றனர். அடுத்த நாளே மீண்டும் கூடிக் கொள்கின்றனர். நேற்று அந்த அணியில் இருந்தவர்கள், எந்த வெளிப்படையான காரணமுமில்லாமல் இன்று இந்த அணிக்குத் 'தாவுகின்றனர்'. குதிரை பேரம் நடப்பது நாட்டிற்கே தெரிகிறது. ஆனால் ஆளுநருக்குத் தெரியவில்லை.

"ஒரு வாரத்தில் நீ மாமியார் வீட்டுக்குப் போய்விடுவாய்" என்கிறார் தினகரனைப் பார்த்து முதலமைச்சர். ஒரு 'மாண்புமிகு' முதலமைச்சரின் மொழிநடை எப்படியிருக்கிறது பாருங்கள்! 19 ஆளுங்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் முதல்வர் மீது நம்பிக்கையில்லை என்று நேரடியாக ஆளுநரிடம் சொன்னபிறகும் கூட, இது உட்கட்சிப் பிரச்சினை என்கிறார் ஆளுநர். அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் சபாநாயகர். திமுக தலைமையில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆளுனரிடம் சென்று மனு கொடுத்த பிறகும், அவர் தனக்கும் தமிழ்நாட்டிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போல, மும்பையில் அமர்ந்திருக்கிறார்.

தாங்கள் தலைகீழாய் நின்றாலும் ஆட்சிக்கு வரமுடியாது, எவ்வளவு தடுத்தாலும் தேர்தல் வைத்தால் மாபெரும் வெற்றி பெற்றுத் திமுக ஆட்சிக்கு வந்துவிடும் என்ற உண்மை நிலவரம் மத்தியில் ஆளும் பாஜக அரசை உறுத்துகிறது. எனவே எடப்பாடி அரசு என்னும் பெயரில் ஓர் எடுபிடி அரசே இருந்துவிட்டுப் போகட்டும் என்று நினைக்கிறார் மோடி.

என்னதான் மோடி வித்தை செய்தாலும், இறுதியில் தளபதியின் படையே வெல்லும். வரும் காலம் இதனைச் சொல்லும்! ●

## 26 ஆண்டுகளுக்குப் பின் கூடு திரும்பியுள்ளது ஒரு பறவை!



பேரறிவாளன் – 26 ஆண்டுகளுக்குப் பின் தன் வீட்டிற்கு வந்துள்ளார். அதுவும் நிரந்தரமாக இல்லை, ஒரு மாத விடுப்பில்! தன் இளமைக் கால வசந்தம் முழுவதையும் சிறை நெருப்பில் சிதைத்துவிட்டு, இன்னும் முழு விடுதலை பெறாமல், பரோலில் தன் சொந்த ஊரான சோலையார்ப்பேட்டை வந்துள்ள பேரறிவாளனை, 14.09.2017 காலை, தி.இ.த. பேரவையின் பொதுச்செயலாளர் சுபவீ, துணைப்பொதுச்செயலாளர் சிங்கராயர், அவைத் துணைத் தலைவர் மா.உமாபதி, எழுத்தாளர் இரா.உமா ஆகியோர் சென்று சந்தித்து ஒரு மணி நேரத்துக்கும் மேலாக உரையாடினர்.

காலம் மாறும், சிறைக் கதவுகள் நிரந்தரமாகத் திறக்கும், முழு விடுதலை பெற்று வீடு திரும்புவார் பேரறிவாளன் என்ற நம்பிக்கையோடு விடைபெற்றனர்! ●

## கொள்கை முடிவைக் குழப்பும் நீதிமன்றங்கள்!

'புதிய விடியலைக்' குறிக்கும் நவோதயா பள்ளிகளைக் கொண்டு வருவது குறித்து 1986 ஆம் ஆண்டு அன்றைய காங்கிரஸ் அரசு அறிவித்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பள்ளியை உருவாக்கி, அதற்கு 20 கோடி ரூபாய் மானியமாகக் கொடுத்து, 240 மாணவர்களை சேர்த்து, மாதிரிப் பள்ளியாக நடத்திக் காட்டுவது என்பது திட்டம். 11, 12 ஆம் வகுப்புகளில் இந்தி கட்டாயம் என்பது அதில் நளினமாகத் திணிக்கப்பட்ட நஞ்சு.

எம்.ஜி.ஆர், கலைஞர், ஜெயலலிதா ஆகிய மூவருமே தாங்கள் முதல்வார்களாக இருந்த கால கட்டங்களில், நவோதயா பள்ளிகளுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை என்று தெளிவாகக் கூறிவிட்டனர். அறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கைக்கு எதிரான இத்திட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ள இயலாது என்று அரசு கொள்கை முடிவு எடுத்தது.

இப்போது அரசின் கொள்கை முடிவில் நீதிமன்றம் தலையிடுகிறது. நவோதயா



பள்ளிகளை நடத்த வேண்டும் என்கிறது. அதனை மத்திய அரசு மௌனமாய் ரசிக்கிறது. இங்கே உள்ள எடுபிடி அரசு எதுவும் பேசாமல், 'அம்மா ஆட்சியை' நடத்துவதாகச் சொல்கிறது.

இந்தித் திணிப்புக்காக மட்டுமில்லை, லட்சக்கணக்கான பிள்ளைகள் உள்ள மாவட்டத்தில், 240 பிள்ளைகளுக்கு மட்டும் தனிச் சலுகை என்பது என்ன நியாயம்? மறைந்த கல்வியாளர் நெ.து. சுந்தரவடிவேலு சொன்னதை போல, குடிசைகளுக்கு நடுவில் ஏன் அரண்மனை கட்ட வேண்டும்? அந்தப் பணத்தை ஏன் எல்லாக் குழந்தைகளுக்குமான கல்விக்காகச் செலவழிக்கக் கூடாது?

இவை போன்ற ஜனநாயகக் கேள்விகளுக்கெல்லாம் மத்திய அரசோ, நீதிமன்றமோ விடை சொல்லவில்லை என்றால், நவோதயா பள்ளிகளை எதிர்த்துத் தெருவில் இறங்கிப் போராடுவதைத் தவிரத் தமிழர்களுக்கு வேறு வழியில்லை. ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## மதுரைத் திருமண விழாவில்...



**10.09.2017** ஞாயிறு அன்று மதுரையில் நடைபெற்ற டாக்டர் இரா.சீனிவாச ராகவனின் இல்லத் திருமண விழாவில், இரா.இராமசந்திரன், வீ.வீரம்மாள் ஆகிய இணையரை வாழ்த்தித் திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன், பொருளாளர் எழில்.இளங்கோவன், பேராசிரியர் அருணன் ஆகியோர் பேசினர்.

## நீட்–எதிர்ப்பு காஞ்சி மாவட்டம்



**13.09.2017** அன்று தாம்பரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையில் நடைபெற்ற நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தளபதி ஸ்டாலின், தா.மோ.அன்பரசன் உள்ளிட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் முன்னிலையில் காஞ்சி மாவட்ட பேரவைச் செயலாளர் இளமாறன் ஆற்றும் கண்டன உரை.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## எது தூய்மை இந்தியா?

**மோடி** தூய்மை என்பதை மலத்திலும், 'கக்கூ'சிலும் தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அதையும் தாண்டி எண்ணத்தில், சிந்தனையில், உள்ளத்தில் இருக்க வேண்டிய தூய்மையை மோடியும், அவரின் அரசும், அவர் சார்ந்த பா.ஜ.க.வும் உணரத் தவறிவிட்டனர்.

மாற்றுக் கருத்துக்கு வழிவிடுவது சனநாயக மாண்பு. மாறாக, இந்துத்துவ மக்கள் விரோதச் செயல்களுக்கு எதிராக எழுதியவர்கள் என்பதற்காக கல்புர்கி, நரேந்திர தபோல்கர், கோவிந் பன்சாரே ஆகிய முற்போக்கு எழுத்தாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அண்மையில் கர்நாடகத்தில் பெண் பத்திரிகையாளர் கௌரி லங்கேஸ் கொல்லப்பட்டுள்ளார்.

இம்மூவரையும் கொன்றவன் ஒருவன்தான் என்று, கைரேகைப் பதிவை ஆய்வு செய்த தடய அறிவியல் துறை தன் அறிக்கை மூலம் உறுதி செய்திருக்கிறது.

மாற்றுக் கருத்தைத் தாங்காத அந்த கொலைகாரனின் தூய்மையற்ற இதயம் - இந்தத் தூய்மை இந்தியாவில்தானே இருக்கிறது.

அந்தக் கொலைகாரனை கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பிடிக்காமல், இழுத்தடித்துக் கொண்டிருக்கும் தூய்மையற்ற நிர்வாகம், இதே தூய்மை இந்தியாவில்தானே இருக்கிறது.

திருச்சி குழுமூரைச் சேர்ந்த ஏழை மாணவி அனிதா 1,176 மதிப்பெண் பள்ளி இறுதித் தேர்வில் பெற்றும், அந்தக் குழந்தையின் 'மருத்துவ'க் கனவு மலக்குழிக்குள் புதைந்துப் போனது. காரணம் மோடியின் தூய்மையற்ற நீட் எனும் தேர்வு.

கட்சி வேறுபாடு இன்றி நீட் தேர்வுக்கு எதிராகச் சட்டமன்றத்தில் குரல் எழுப்பியும் கூடத் தீர்வு காணமுடியவில்லை.

''சட்டம் இயற்றுங்கள். நீட்டுக்கு விலக்கு அளிக்கிறோம்'' என்றார் பா.ஜ.க.வின் நிர்மலா சீதாராமன்.

அதே சீதாராமன் சட்டமன்ற தீர்மானம் குறித்து எதுவும் தெரியாது என்று அடுத்த சில நாட்களில் நீட் தேர்வுக்கு ஆதரவாக குரல் எழுப்பினார்.

நீட் தேர்வுக்காகப் பிணமாகி நெருப்பில் எரிந்தாளே குழந்தை அனிதா, அவளின் உடல் எரிந்த 'கங்கு' ஆறும் முன் அந்த நிர்மலா சீதாராமனுக்கு அமைச்சரவையில் மிக உயர்ந்த பதவி கொடுத்துள்ளார் மோடி.

நீட்டால் அனிதாவைக் கொலை செய்தது மத்திய - மாநில அரசுகள். அங்கே தூய்மையில்லை. அனிதாவின் கொலையை உதாசினப்படுத்திய நிர்மலாவின் இதயம் தூய்மையாக இல்லை. அவரை இராணுவ அமைச்சராக்கிய மோடிக்கு எது தூய்மை என்று தெரியவில்லை.

மலத்தில் தேடுவதன்று தூய்மை! அது மனத்தில் இருக்க வேண்டும்.

## நீட்–எதிர்ப்பு திண்டுக்கல் மாவட்டம்



**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் 13.09.2017 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் புலேந்திரன், ஞானசேகரன், வேடசந்தூர் ரவி உள்ளிட்டோர்.

## நீட்–எதிர்ப்பு ஈரோடு மாவட்டம்



**தி**ராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் 13.09.2017 அன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் தமிழ்க் குமரன் தலைமையில் பேரவைத் தோழர்கள்.

# சரஸ்வதி நதியைத் தேடுகிறாய்
# கீழடி ஆய்வை மூடுகிறாய்!

● சுப.வீரபாண்டியன்

சிவகங்கை மாவட்டம் கீழடியில் மூன்று மாதங்களுக்கு முன் தொடங்கிய மூன்றாம் கட்ட அகழாய்வை, மழையைக் காரணம் காட்டி, மீண்டும் மூடும் முயற்சியில் மத்திய அரசு இறங்கியுள்ளது. அதனைக் கண்டித்தும், ஆய்வுப் பணி தொடர வேண்டும் என்று வலியுறுத்தியும், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில், 16.09.2017 அன்று காலை 10.30 மணி முதல் 12 மணி வரையில், கீழடியிலேயே மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பேரவையின் பொதுச்செயலாளர் தோழர் சுப. வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெலன் டேவிட்சன், திமுக மாவட்டத் துணைச்செயலாளர் சேங்கை மாறன், திராவிடர் கழகச் சட்டப்பிரிவுச் செயலாளர் கணேசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஒன்றியச் செயலாளர் கண்ணன், இந்திய மார்ஸ்சிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கந்தசாமி, திமுக கலை இலக்கியப் பகுத்தறிவு அணியின் மாநிலச் செயலாளர் பொள்ளாச்சி மா. உமாபதி, மீஞ்சூர் பாஸ்கர், தி.இ.த, பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் சிங்கராயர், மாநிலக் கூடுதல் அமைப்புச் செயலாளர் புலேந்திரன், மதுரை மாவட்டப் பொறுப்பாளர்கள் ஜெயபால் சண்முகம், ஜெயம்பெருமாள், அமர்நாத், சரவணன், நாகலட்சுமி, தம்பி பிரபு மற்றும் திண்டுக்கல், திருச்சி, தஞ்சை, முகவை மாவட்டப் பேரவைப் பொறுப்பாளர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை, கீழடியைச் சேர்ந்த வாசு, ராஜமூர்த்தி ஆகியோர் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

தமிழர்களின் தொன்மையான வரலாற்றைக் கீழடியில் பார்க்க முடிந்தது. 2022 ஆண்டுகளுக்கு முன்னால் உறை கிணறுகளைத் தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பதும், செங்கல் கட்டிடங்களைக் கட்டியுள்ளனர் என்பதும் மூன்றாம் கட்ட ஆய்வில் கிடைத்துள்ள வியத்தகு செய்திகளாக உள்ளன. எனினும், 110 ஏக்கரில் நடைபெறவேண்டிய ஆய்வு அங்கு வெறும் அரை ஏக்கரில்தான் நடந்து கொண்டுள்ளது.அதனையும் கூட மறைக்கப் பார்க்கிறது மத்திய அரசு!

இது புதிதன்று. ஆதிச்சநல்லூர் ஆய்வு முடிவுகளும் இப்படித்தான் 11 ஆண்டுகளாக வெளிவராமல் இருக்கின்றன. ஆய்வறிஞர் ராகவன் கொடுத்த மூன்று தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ள அறிக்கையை இன்னும் மத்திய அரசு வெளியிடாமல் வைத்துள்ளது.





## Centre deliberately discouraging excavations in Tamil Nadu

STAFF REPORTER
MADURAI

The Dravida Iyakka Tamizhar Peravai general secretary Suba. Veerapandian on Saturday blamed the Central government for deliberately discouraging archaeological excavations in Tamil Nadu, particularly in Keezhadi, in a bid to suppress its rich cultural heritage from coming to light.

Speaking at a demonstration staged by his organisation in association with the DMK at Keezhadi, demanding continuation of excavations at the site, he said that the findings so far from Keezhadi indicated existence of a thriving Tamil civilisation on the banks of Vaigai river around 2,200 years ago. Alleging that the BJP-led government at the Centre did not want the details of this civilisation to come to light, he said that it was consequently using various tactics to stop the excavations.

On ASI claim that no significant discoveries were made in the ongoing third season of excavation at Keezhadi, he said that some ring wells and brick structures were found, apart from other artefacts.

He also blamed the ASI of restricting the excavations to a smaller area, by citing 'lame' excuses such as rain and unwillingness of the locals to excavate their land. Claiming that the villagers were willing to give up land, he, however, stressed that adequate compensation must be provided for the land since their livelihood depended on it.

Stating that Tamil Nadu government should be pressurising the Centre to continue the excavations, he, however, alleged that the State government had proved to be ineffectual.

Echoing similar views, Pon. Muthuramalingam, former MLA and DMK functionary, questioned the rationale of the Central government in spending crores of rupees for excavations to find the existence of the mythical Saraswathi river, whereas it was hesitant to continue excavations at Keezhadi that already provided ample evidence of existence of an ancient Tamil civilisation.

Poser to Centre: Dravida Iyakka Tamizhar Peravai general secretary Suba. Veerapandian and cadre staging a demonstration at Keezhadi on Saturday.



▲ கீழடியில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலர் சுப.வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.

கீழடியில் அகழாய்வு தொடர்ந்து நடைபெற வலியுறுத்தி

## திராவிட இயக்க தமிழர் பேரவை ஆர்ப்பாட்டம்

திருப்புவனம்

கீழடி அகழாய்வு தொடர்ந்து நடைபெற மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் கீழடி மந்தைத்திடல் முன் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதற்கு தலைமை வகித்த அப்பேரவையின் பொதுச்செயலர் சுப.வீரபாண்டியன் பேசியது: தமிழர்களின் தொன்மை வரலாற்றை எடுத்துக்கூறும் கீழடியில் கிடைக்கும் தடயங்கள் மத்திய அரசால் மறைக்கப்படுகின்றன. சுமார் 11 ஆண்டுகளுக்கு முன் ஆதிச்சநல்லூரில் நடந்த அகழாய்வு அறிக்கையை மத்திய அரசு இது வரை அளிக்கவில்லை. தமிழர்களின் பண்பாடு, சமூக நீதி ஆகியவை மத்திய அரசால் அழிக்கப்படுகிறது. இதை தட்டிக்கேட்க முடியாத வகையில் அதிமுக அரசு உள்ளது. கீழடியில் 110 ஏக்கர் பரப்பளவில் 20 ஆண்டுகளுக்கு குறையாமல் அகழாய்வு மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் தமிழர்களின் தொன்மை, நாகரிகத்தை உலகுக்கு உணர்த்த வேண்டும். இதற்கு மத்திய, மாநில அரசுகள் அக்கறை காட்டவேண்டும் என்றார். இதில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் மாநில துணைப் பொதுச்செயலர் சிங்கராயர், திமுக தீர்மானக் குழு உறுப்பினர் பொன்.முத்துராமலிங்கம், மாநில மகளிர் தொண்டர் அணி செயலர் ஹெலன் டேவிட்சன், சிவகங்கை மாவட்ட திமுக துணைச் செயலர் சேங்கைமாறன் கலந்து கொண்டனர்.

அப்பணியை விரைவுபடுத்த முயன்ற மகேஸ்வரி என்னும் அதிகாரி, இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள பொருள்களோ, சிந்து சமவெளிக்கும் முந்தியனவாக உள்ளன.

தமிழர்களின் வரலாறு தொன்மையானது, அவர்கள் இந்தியாவின் மூத்த குடிமக்களாக வாழ்ந்துள்ளனர், சமயச் சார்பற்றவர்களாக இருந்துள்ளனர் என்னும் செய்திகள் எல்லாம் வெளிப்பட்டு விடக் கூடாது என்பதில் அரசு மிகவும் கவனமாக உள்ளது.

இல்லாத சரஸ்வதி நதியைத் தேடுகின்றனர். இருக்கின்ற கீழடி ஆய்வை மூடுகின்றனர். இதுதான் இன்றையக் காவி அரசின் போக்காக உள்ளது. எத்தனை நாளைக்குத் தான் பஞ்சைப் போட்டு அவர்களால் நெருப்பை மறைக்க முடியும்? ●

# ஆணவத்திற்கு விழுந்த அடி!

● சுபவீ



70, 80 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பார்ப்பனர்கள் எப்படித் திமிராகப் பேசுவார்களோ, அதே திமிருடன் இன்றும் பேசிக் கொண்டிருப்பவர், பாஜகவின் தேசியச் செயலாளர் ஹெச். ராஜா என்றார் புலவர் ஜெயபால் சண்முகம். நூற்றுக்கு நூறு உண்மையான சொல் அது!

கடந்த 15 ஆம் தேதி கூட, ஈ.வே.ரா. வைப் பின்பற்றுபவர்கள் எல்லோரும் முட்டாள்கள் என்று கூட்டமொன்றில் உளறிக் கொண்டிருந்தார். அத்தனை ஆணவத்திற்கும் சேர்த்து விழுந்தது மறுநாள் ஓர் அடி! 16.09.2017 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சாரண சாரணியர் இயக்கத் தலைவருக்கான தேர்தலில், ஹெச். ராஜாவும், முன்னாள் பள்ளிக் கல்வித் துறை இயக்குனர் மணியும் போட்டியிட்டனர். அந்தப் பொறுப்புக்கு ஓர் அரசியல்வாதி போட்டியிடுவது இதுதான் முதல்முறை.

மொத்தம் பதிவான 286 வாக்குகளில், மணி 232 வாக்குகளைப் பெற்று மாபெரும் வெற்றி பெற்றார். இரண்டு வாக்குகள் செல்லாத வாக்குகள். 52 வாக்குகளை மட்டுமே பெற்று, ஹெச். ராஜா படுதோல்வி அடைந்தார்.

அடுத்தவர் தோல்வியில் மகிழ்வது நம் இயல்பில்லை. ஆனால் ஹெச். ராஜா போன்ற ஆணவக்காரர்களின் படுதோல்வி கண்டு நம்மால் மகிழாமல் இருக்க முடியவில்லை! ●



# பேராசிரியர் நா.வானமாமலை

● எழில்.இளங்கோவன்

**மறக்க முடியுமா?**

பேராசிரியர் நா.வானமாமலை!

இவர் எந்த ஒரு கல்லூரியிலோ, பல்கலைக்கழகத்திலோ பேராசிரியராகப் பணியாற்றவில்லை. தொழில் முறைப் பேராசிரியராகக் கூட இருந்ததில்லை. ஆனாலும் இன்றும் கூட அறிவுத் தளங்களில் இவர் பேராசிரியர் என்றே அழைக்கப்படுகிறார் என்பது இவரின் பெருமைக்குச் சான்று.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி இவரின் சொந்த ஊர். 7.12.1907 ஆம் ஆண்டு இவர் பிறந்தார்.

திருநெல்வேலி இந்துக் கல்லூரியிலும், மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும் பயின்ற இவர் முதுகலைப் பட்டம் பெற்று, சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார்.

பொதுவுடைமைக் கொள்கையால் ஈர்க்கப்பட்ட நா.வா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் கல்விப் பிரிவுக்குப் பொறுப்பாளர் ஆனார்.

அதைத் தொடர்ந்து சில அடிப்படையான விஞ்ஞான நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். பல அறிவியல் கட்டுரைகளை எளிமையாக எழுதியிருக்கிறார்.

'விண்வெளி ரசாயணம்' 'விஞ்ஞானத் தொழில்புரட்சியும் அதன் விளைவும்' போன்ற அறிவியல் நூல்களும் இவரால் எழுதப் பெற்றுள்ளன.

ரப்பரின் கதை, இரும்பின் கதை, காகிதத்தின் கதை ஆகிய நூல்களை இவர் சிறுவர்களின் அறிவியல் சிந்தனைக்காக எழுதி இருக்கிறார்.

தமிழ்நாட்டில் தி.நா.சு., கி.வா.ஜ., பெரியசாமி தூரன், செ.அன்னகாமு போன்றவர்கள் நாட்டுப்புறப் பாடல்கள் குறித்து ஆர்வம்காட்டி வந்த காலம் அது.

அப்பொழுது நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்து அதன் வரலாறு, பாடியவர்கள், பாடல் வழங்கிய இடங்கள், அவை சார்ந்த நிலம், சூழல், மெய்ப்பொருள், பாடல்களைச் சேகரித்தோர் என்று விளக்கங்களுடன் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டார் நா.வானமாமலை.

'தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்' (1960), 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' (1964) ஆகிய இரு தொகுப்புகள் அப்படி அவரால் வெளியிடப்பட்டனவாகும்.

நாட்டுப் புறப் பாடல், மானிடவியல், அடித்தள மக்களின் ஆய்வு போன்றவை அறிமுகமாகி விவாதத்தில் இருக்கும் போது 'நாட்டுப்புறவியல்' என்ற கலைச் சொல் உருவானது.

அதை நா.வானமாமலை 'நாட்டார் வழக்காற்றியல்' என்றார். இவ்விரு சொற் பெயர்கள் இன்றும் வழக்கில் இருந்து வருகின்றன.

நாட்டார் கதைகளை, பாடல்களைப் பலர் தொகுத்தார்கள், வெளியிட்டார்கள்.

சமூகவியல், மானிடவியலில் அந்நாட்டார் வழக்காற்றியல் எப்படி மையம் பெறுகிறது என்பதைச் சுட்டிக் காட்டினார். இவைகளை ஆய்வுகளுக்கும் உள்ளாக்கினார் நா.வானமாமலை.

அதே சமயம் கதைப் பாடல்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, அவைகளை வெளிக் கொண்டுவந்த பெருமை இவரையே சாரும்.

பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்த போது, அவரின் துணையுடன் ஆறு கதைப் பாட்டிலக்கியங்களைப் பதிப்பாசிரியராக வெளியிட்டார் நா.வா. வெளியிட்டது மதுரைப் பல்கலைக்கழகம்.

அவை,

1. கட்டபொம்மன் கதைப்பாடல்
2. கட்டபொம்மன் கூத்து

– இவை இரண்டும் கட்டபொம்மன் குறித்த வரலாறை மக்களின் நாட்டுப்புறப் பார்வையில் சொல்கிறது.

3. முத்துப்பட்டன் கதை

இந்நூல் அருந்ததியர் சமூகம் குறித்த, குற்றால மலைப்பகுதியின் கதையாகச் சொல்லப்பட்டுள்ளது. செக்கோசுலோவேக்கிய மொழியில், மொழிபெயர்க்கப்பட்ட முதல் தமிழ்க் கதைப் பாட்டிலக்கியம் இது.

4. கான்சாகிபு சண்டை

மருதநாயகம் என்று அழைக்கப்பட்ட கான்சாகிப் நடத்திய சண்டை பற்றிய நூல் இது.

5. காத்தவராயன் கதைப் பாடல்

ஒடுக்கப்பட்ட பறையர் சமூகத்தளத்தில் இக்கதைப் பாட்டிலக்கியம் அமைகிறது.

6. ஐவர் ராஜாக்கள் கதை

நாயக்க மன்னரின் மேலாதிக்க ஆட்சியை ஏற்க மறுத்த ஐந்து பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவர்களின் கதை இது.

இந்தக் கதைப் பாட்டிலக்கியப் பதிப்பின் வரலாற்றுக் குறிப்புகள், வழக்குச் சொற்கள், நிகழ்வின் குறிப்புகள், சொல் விளக்கம் ஆகிய சிறப்புகள் உடையன. இவற்றுடன் நா.வானமாமலையின் ஆய்வு முன்னுரைகள் மிக முக்கியத்துவம் பெற்றதாக அமைந்திருக்கின்றன.

1975ஆம் ஆண்டு தார்வார் திராவிட மொழியின் பல்கலைக் கழகத்தில் ஆய்வுத்துறையில் பணியாற்றினார்.

அப்பொழுது International of Tamil Folk Creations என்று இவரால் எழுதப்பட்ட நாட்டுப்புற இலக்கிய ஆய்வு நூல் மிகச் சிறப்பாகப் பேசப்பட்டது.

இந்நூலும், இவரின் பல ஆங்கிலக் கட்டுரைகளும் இன்னமும் தமிழில் மொழிபெயர்க்கப் படவில்லை.

தமிழின் ஆய்வுத் தளத்தை விரிவுபடுத்தும் நோக்கில் 'ஆராய்ச்சி' என்ற ஆய்விதழை 1969ஆம் ஆண்டு தொடங்கினார் இவர்.

இதில் இவரின் ஆய்வுகள் மட்டுமின்றி, பல்வேறு துறை சார்ந்த ஆய்வறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகளையும் வெளியிட்டு வந்தார்.

பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளும், தன் இறுதிகாலம் வரை இவ்விதழை இவர் நடத்தி வந்தது குறிக்கத்தக்கது.

இந்திய நாத்திகமும் மார்க்சியமும் – இலக்கியத்தின் உள்ளடக்கமும் உருவமும் – உயிரின் தோற்றம் – உரைநடை வளர்ச்சி – கட்டபொம்மன் கதைப்பாடல் – கட்டபொம்மன் கூத்து– கான்சாயபு சண்டை – முத்துப்பட்டன் கதை – காத்தவராயன் பாடல் – ஐவர் ராஜாக்கள் கதை – தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டம் – தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள் – தமிழ் நாட்டுப் பாடல்கள் – தமிழர் பண்பாடும் தத்துவமும் – தமிழர் வரலாறும் பண்பாடும் – பழங்கதைகளும் பழமொழிகளும் – புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும் – மக்களும் மரபுகளும் – மார்க்சிய அழகியல் – மார்க்சிய சமூக இயல் கொள்கை – வ.உ.சி முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி – Studies in Tamil Folk Literature ஆகிய இவரின் 22 நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

இவரின் இளமைக் காலத்தில், நாங்குநேரி வட்டார விவசாய இயக்கத்திலும், நெல்லை மாவட்டத் தொழிலாளர் இயக்கத்திலும் செயல்பட்டார்.

புகழ்பெற்ற திருநெல்வேலி சதிவழக்கு விசாரணைக் கைதிகளுள் இவரும் ஒருவர்.

கோயில் நுழைவு, சாதி ஆதிக்கத்திற்கு எதிராக, நில மீட்புப் போராட்டங்கள் எனப் பல்வேறு போராட்டங்களில் இவர் பங்கு கொண்டுள்ளார்.

நகராட்சி உறுப்பினராகவும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலத்தலைவராகவும் இவர் ஆற்றிய சமூகப் பணிகளும் மறக்கக் கூடியவை இல்லை.

இப்படிப்பட்ட பெரும் சிறப்புக்கு உரிய பேராசிரியர் நா.வானமாமலை அவர்கள் தன் 73ஆம் வயதில் 1980ஆம் ஆண்டு காலமானார். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.